# நீங்கள் 18 வயதிற்குட்பட்டவரா மற்றும் ஆபத்தில் இருப்பதாக உணர்கிறீர்கள் ?



# பிரான்சில், அனைத்து குழந்தைகளும் வன்முறை மற்றும் சுரண்டலிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்



உங்களுக்கு **ஆபத்து அல்லது நீங்கள் விரும்பாத விஷயங்களை,** அதாவது சங்கடத்தை உருவாக்குகிற அல்லது தடை செய்யப்பட்டவை போன்ற விஷயங்களைச் **செய்ய கட்டாயப்படுத்தப்படுவது** போல உணர்ந்தால், நீங்கள் மிரட்டப்பட்டிர்கள் மற்றும் தாக்கப்பட்டீர்கள்



அல்லது **ஒரு நபரோ, ஒரு குழுவோ** உங்களை வேலை செய்ய, பிச்சை எடுக்க, திருட அல்லது குற்றம் செய்ய, உடலுறவு கொள்ள, கடன் செலுத்த அல்லது போதைப்பொருளைப் பயன்படுத்த கட்டாயப்படுத்தினால்.



அல்லது **உங்கள் பெற்றோர் அல்லது கார்டியன் இல்லாமல் நீங்கள்** பிரான்சில் இருந்தால்.



**ஒரு நிபுணரிடம் பேசுங்கள்:**
காவல்துறை அதிகாரிகள், சங்கங்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள், சமூக சேவகர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள்...

**உங்களைப் பாதுகாப்பது** அவர்களின் வேலை.
**உதவியை**ப் பெறுவதற்கும், உங்களுக்குத் **தீங்கு செய்ய விரும்பும் நபர்களிடமிருந்து விலகி இருப்பதற்கும்** உங்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் சட்டவிரோதமான ஒன்றைச் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டால், அதற்காக நீங்கள் தண்டிக்கப்பட முடியாது.




நீங்கள் **காவல்துறை மற்றும் ஜெண்டர்மேரியைத்** தொடர்பு கொள்ளலாம். **17 (பிரெஞ்சு)** ஐ அழைப்பதன் மூலம்.
நீங்கள் **ஹலோ ஆபத்தில் இருக்கும் குழந்தைகள்- ஐ 119-க்கு** போன் அடிக்கலாம் (இலவசம் மற்றும் பெயர் மறைக்கப்படும், 24 மணிநேரம், பிரெஞ்சு மற்றும் மொழிபெயர்ப்பு).

# நீங்கள் 18 வயதிற்குளிருந்தால், உங்கள் பெற்றோர் இல்லாமல் அல்லது கார்டியன் இல்லாமல் நீங்கள் பிரான்சில் இருந்தால்



நீங்கள் பிரான்சுக்கு வந்தவுடன், **அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுவதற்கும்,** குறைந்தபட்சம் 18 வயது நிறைவடையும் வரை இலவசமாக தங்குவதற்கும், ஆதரவு பெறுவதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு. இது குழந்தைகள் சமூக நலன் என்று அழைக்கப்படுகிறது.

**ஒரு சிறார் நீதிபதி மற்றும் கல்வியாளர்கள் உங்களுக்கு ஆதரவு கொடுப்பார்கள்.** உங்கள் வயதுக்கு ஏற்ப கூட்டு விடுதியில், அபார்ட்மெண்ட், ஹோஸ்ட் குடும்பத்தில்... உங்களை வரவேற்பார்களா என்பதை அவர்கள் உங்களுடன் முடிவு செய்வார்கள்



**ஒரு ஆண் அல்லது பெண் மருத்துவர் உங்களுக்கு இலவசமாக சிகிச்சையளிக்க முடியும்.**

**பிள்ளைகள் எங்கிருந்து வந்தாலும் அவர்களுக்கு பள்ளி இலவசம் மற்றும் அனுமதி உண்டு.** உங்கள் நிலைக்கு ஏற்ப நீங்கள் பிரெஞ்சு கற்றுக்கொள்வீர்கள், உங்கள் வயதுடைய இளைஞர்களுடன் நீங்கள் பள்ளிக்குச் செல்ல முடியும், அத்துடன் நீங்கள் விரும்பும் ஒரு தொழிலையும் கற்றுக்கொள்ள முடியும். **பிரான்சில், சட்டப்பூர்வ வேலை வயது 16 ஆகும்.**



**ஒரு குழந்தையாக நீங்கள் பிரான்ஸில் தங்குவதற்கு ஆவணங்கள் தேவையில்லை.** உங்கள் தேவைகள் மற்றும் சூழ்நிலையைப் பொறுத்து, வல்லுநர்கள் நீங்கள் எடுக்கும் படிகளில் உங்களுக்கு உதவி செய்வார்கள்.

நீங்கள் குடும்ப உறுப்பினர்களை இழந்திருந்தால்,  அவர்களைக் கண்டுபிடிக்க, தொடர்பில் இருக்க அல்லது அவர்களுடன் மீண்டும் இணைய **பிரெஞ்சு செஞ்சிலுவைச் சங்க**ம் உங்களுக்கு உதவ முடியும்.



செஞ்சிலுவைச் சங்கத்தைத் தொடர்பு கொள்ள
**+33(0)1 44 43 12 60**
அல்லது ஈமெயில் மூலம் **recherches@croix-rouge.fr**

**நீங்கள் உங்கள் பெற்றோர் இல்லாமல் ஆனால் குடும்ப உறுப்பினர்களுடன் இருந்தால்**

(உடன்பிறப்புகள், தாத்தா, பாட்டி, அத்தைகள், மாமாக்கள், இவர்கள் பிள்ளைகள்) அல்லது உறவினர்கள்:

**நீங்கள் உதவி பெற வல்லுநர்களைத் தொடர்புகொள்வது  நீங்கள் உதவி பெற வல்லுநர்களைத் தொடர்புகொள்வது  முக்கியம் : போலீஸ் அதிகாரிகள், சங்கங்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள், சமூக சேவகர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள்...**

உங்கள் குடும்ப உறுப்பினர்கள் உங்களை கவனித்துக் கொள்ள முடிந்தால், அவர்களுக்கு உதவி கிடைக்க முடியும்.

# உங்களை எச்சரிக்க வேண்டிய அறிகுறிகள் யாவை?

**ஒரு பெண்ணாக, ஆணாக மற்றொரு இளைஞராக இருந்தாலும் சரி விழிப்புடன் இருங்கள்:**

• உங்கள் ஆவணங்கள் அல்லது அடையாள ஆவணங்களைப் பெற முயற்சித்தால் (அதிகாரிகள் தவிர).

• உங்கள் போட்டோக்கள் அல்லது வீடியோக்களை எடுக்க அல்லது பெற முயற்சித்தால்.

• உங்கள் தொலைபேசி, கம்ப்யூட்டர் அல்லது பிற தகவல்தொடர்பு சாதனங்களை எடுக்க முயற்சித்தால்.

• உங்கள் குடும்பம் அல்லது உறவினர்களிடமிருந்து உங்களைப் பிரிக்க முயற்சி செய்தால்.

• நம்ப கடினமாக இருக்கும் அல்லது மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றும் வாக்குறுதிகளைச் செய்தால்.



• பணத்திற்கு ஈடாக உங்களுக்கு உதவி (போக்குவரத்து, உணவு போன்றவை ...) அல்லது ஆதரவைக் கொண்டு வருவதாக உறுதியளித்தால்

• பணம் கொடுக்காமல் அல்லது மோசமான நிலைமைகளில் உங்களை வேலை செய்ய வைத்தால்.

## உங்களைப் பாதுகாத்துக் கொள்ள சில டிப்ஸ் :

**உங்கள் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அடையாள ஆவணங்களைப் பாதுகாக்கவும்:**



- உங்கள் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அடையாள ஆவணங்கள் முக்கியம் வாய்ந்தவை மற்றும் எப்போதும் பாதுகாப்பான மற்றும் ரகசிய இடங்களில் வைக்கப்பட வேண்டும்.

- இவற்றை போட்டோ எடுத்து ஈமெயிலுக்கு அனுப்பவும் அல்லது ஒரு நகல் எடுக்கவும், தொலைந்து போனால் இது உங்களுக்கு உதவும்.

- அதிகாரிகளிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும், அதுவும் அவர்கள் கேட்டால் மட்டும்.

- உங்களையும் உங்கள் சூழ்நிலையையும் வைத்து துஷ்பிரயோகம் செய்வதற்காக சமூக வலைத்தளங்களில் தீங்கிழைக்கும் நபர்கள் உங்கள் நம்பிக்கையை பெற முயற்சிக்கலாம்.




- உங்கள் தனிப்பட்ட தகவல்களை ஒருபோதும் பகிர வேண்டாம் மற்றும் சரிபார்க்கப்படாத சமூக ஊடகங்கள் அல்லது வலைத்தளங்களில் அந்நியர்கள் உங்களிடம் கேட்பவற்றை ஏற்க வேண்டாம். பிரான்சில், உத்தியோகபூர்வ அரசாங்க வலைத்தளங்கள் ".gouv.fr" என்று முடிவடைகின்றன.

**உங்கள் உறவினர்களுடன் தொடர்பில் இருங்கள்:**

- குடும்பத்தினர், உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் தொடர்பில் இருங்கள். உங்கள் பிரச்சனைகளைப் பற்றி அவர்களிடம் சொல்லுங்கள்.

- முடிந்தால், உங்களுக்குத் தெரிந்த மற்றும் நம்பகமான நபர்களுடன் பயணம் செய்யுங்கள்.

- உங்கள் குடும்பம் அல்லது உறவினர்களிடமிருந்து பிரிவதை ஏற்றுக்கொள்ளதீர்கள்.



- உங்கள் தொலைபேசியை உங்களுடன் வைத்திருங்கள்.

நீங்கள் நம்பும் ஒருவரின் தொலைபேசி எண்ணை ஞாபகத்தில் வைத்திருங்கள் மற்றும் நீங்கள் ஆபத்தில் மற்றும் சுதந்திரமாக பேச முடியாத சூழலில் இருப்பதை தெரிவிக்கக்கூடிய ஒரு ரகசிய வார்தை இருவரும் தீர்மானியுங்கள்.



**ஜாக்கேட் அல்லது அட்டை போன்ற ஒரு தனித்துவமான அடையாளம் உள்ள நிபுணர்களின் உதவியை மட்டுமே ஏற்றுக்கொள்ளுங்கள்**

• உங்களுக்கு உதவும் நிறுவனங்கள் மற்றும் சங்கங்களின் பெயர்கள் மற்றும் அதிகாரப்பூர்வ தகவல்களைக் கேளுங்கள்.



• நீங்கள் ஒருவரின் காரில் ஏற வேண்டியிருந்தால், நம்பர் பிளேட்டே போட்டோ எடுத்து நீங்கள் நம்பும் ஒருவருக்கு அனுப்புங்கள். பொது போக்குவரத்தை பயன்படுத்துவதில் முன்னுரிமை கொடுங்கள்.

• நீங்கள் அதிகாரப்பூர்வ தங்குமிட சேனல்களுக்கு வெளியே ஒருவருடன் தங்குகிறீர்கள் என்றால், அந்த நபரின் தகவலை (அடையாளம் மற்றும் முகவரி) பார்க்கச் வேண்டும் என்று கேளுங்கள் மற்றும் இந்த தகவலை ஒரு அதிகாரியிடம் தெரிவியுங்கள்.



# யாரை தொடர்பு கொள்வது மைனராக இருக்கும்போது?

## மைனர்களுக்கு நேரடி உதவிகளை வழங்கும் நிறுவனங்கள்.

| | |
|---|---|
| **"மனித கடத்தலுக்கு எதிராக ஒன்றிணைவோம்" கூட்டுறவு** | மனித உரிமை மறுப்பின் அனைத்து வடிவங்களுக்கும் எதிராக மிகவும் பயனுள்ள போராட்டத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு கூட்டுறவு. 2007 ஆம் ஆண்டில் கத்தோலிக்க நிவாரணம் -ஆல் உருவாக்கப்பட்டது, இது பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய 28 பிரெஞ்சு சங்கங்களை ஒன்றிணைக்கிறது. |
| **Secours catholique - Caritas France**<br>**கத்தோலிக்க நிவாரணம் - கரிதாஸ் பிரான்ஸ்ம்** | செவிக் கொடுத்தல், வரவேற்பு, வழிகாட்டுதல் மற்றும் ஆபத்தில் உள்ளவர்களுக்கும் மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆதரவு. |
| **Croix-Rouge française**<br>**பிரெஞ்சு செஞ்சிலுவைச் சங்கம்** | ஆபத்தில் உள்ளவர்களுக்கும் மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தகவல்களையும் வழிகாட்டலையும் வழங்குகிறது. |
| **Hors la Rue**<br>**தெருவுக்கு வெளியே** | சுரண்டல் சூழலில் இருக்கும் வெளிநாட்டு ஆதரவற்ற சிறார்களை அடையாளம் கண்டு ஆதரவு கொடுப்பது. |
| **Ecpat France - mission Calais**<br>**எக்பாட் பிரான்ஸ் - கலே மிஷன்** | ஆதரவற்ற சிறார்கள் மற்றும் கடத்தலால் பாதிக்கப்பட்ட வயது வந்தவர்களுக்கு சமூக மற்றும் சட்ட ஆதரவை வழங்குகிறது. |
| **Agir Contre la Prostitution des Enfants (ACPE)**<br>**சிறுவர் விபச்சாரத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் (ACPE)** | பாலியல் சுரண்டலால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஆதரவை வழங்குகிறது (உளவியல் கல்வி, சட்ட ஆதரவு). |
| **L'amicale du Nid (AdN)**<br>**அமிகேல் டு நிட் (AdN)** | விபச்சாரத்தில் ஈடுப்படும் சிறார்களுக்கு விரிவான ஒத்துழைப்பை வழங்குகிறது. |
| **ALTHEA - L'Appart**<br>**அல்தியா - தி அப்பெர்ட்** | விபச்சாரத்தில் ஈடுப்படும் அல்லது ஈடுப்படும் அபாயத்தில் உள்ள சிறார்களுக்கு வரவேற்பு, செவிக் கொடுத்தல், வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு வழங்குகிறது. |

**Allô Enfance en Danger 119**
**ஹலோ ஆபத்தில் இருக்கும் குழந்தைகள்**

| | | |
|---|---|---|
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 106 rue du Bac, 75007 Paris<br>06 71 00 69 90<br>contre.la.traiteesecours-catholigue.org<br>www.contrelatraite.org | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 106, rue du Bac, 75007 Paris 06 71 00 69 90<br>genevieve.colas@secours-catholique.org<br>www.secours-catholique.org | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | Sediu: 21 rue de la Vanne, 92100 Montrouge<br>07 81 96 72 49<br>estelle.kieferecroix-rouge.fr<br>www.croix-rouge.fr | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 70, rue Douy Delcupe, 93100 Montreuil<br>01 41 58 14 65 ; contactehorslarue.org<br>www.horslarue.org | பாரிஸ் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | +33 7 53 57 05 34 திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 10 இலிருந்து மாலை 5 வரை (WhatsApp, மொழிகள்: அரபு, திக்ரினிய, ஆங்கிலம், பிரெஞ்சு), AGatoux@ecpat-france.org | கலே |
| செக்ஸ் சுரண்டல்கள் | 14 rue Mondétour, 75001 Paris<br>01 40 26 91 51; contacteacpe-asso.org<br>acpe-asso.org | பாரிஸ் |
| செக்ஸ் சுரண்டல்கள் | Siège : 21 rue Château d'Eau, 75 010 Paris<br>01 44 52 56 43 ; contacteadn-asso.org<br>நிறுவனங்களின் முகவரிகள்: பெற்றுக்கொள்ள<br>amicaledunid.org/presentation/#etablissements<br>பிரத்யேக ஆதார தளம் :jenesuispasavendre.org | இலே-டி-பிரான்ஸ், மார்சேய், துலூஸ், ரென்னஸ், ன்ட்பெல்லியர், லியோன் |
| செக்ஸ் சுரண்டல்கள் | 8, rue du Vieux Temple, 38000 Grenoble<br>04 76 43 14 06 ; contactealthea38.org<br>https://althea38.org/ | க்ரேநொபல் |

**ஆபத்தில் இருக்கும் குழந்தைகளுக்கான இலவசம் மற்றும் பெயர் மறைக்கப்படும் தேசிய ஹெல்ப்லைன் (24/7, கிட்டத்தட்ட 185 மொழிகளில் மொழிப்பெயர்ப்பு), ஆன்லைன் செட் allo119.gouv.fr.**

